[1986 மே 13,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் ஆகிற நெல்லில் பெரும் பகுதி—தஞ்சை மாவட்டத்திலேயிருந்தும் ஏகபோக கொள்முதல் பகுதிகளாக இருக்கின்ற திருச்சி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய முக்கால்வாசி நெல் கொள்முதல் ஆகிறது; சிவில் சப்ளைஸ் மூலமாக கொள்முதல் ஆகிற நெல்லிலே — ஏற்கனவே இங்கிருந்து கொள்முதல் ஆகின்ற நெல்லை வேறு மாவட்டங்களுக்கு, தொலை தூரங்களுக்கு கொண்டு போனால், அதனால் டிரான்ஸ்போர்ட் செலவும், பல் வேறு செலவுகளும் ஏற்படுகின்றன. அந்த அடிப்படையிலே தஞ்சை மாவட்டத்திலே தான் பெரும்பாலும் துவக்கப்படு கின்றன. இப்போது தஞ்சை மாவட்டத்தையொட்டி இருக் கின்ற சில மாவட்டங்களிலேயும் டிரான்ஸ்போர்ட் மூலமாக அரிசியை மற்ற பகுதிகளுக்கு கொண்டு போவதற்கு வசதியாக இருக்கின்றதன் அடிப்படையிலே, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தருமபுரி மாவட்டத்தைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றி இப்போது எதுவும் பதில் சொல்ல முடியாது. ஆய்வு செய்து பின்னாலே பதில் தருகிறேன்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே நவீன அரிசி ஆலை தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. புதுக்கோட்டை மாவட்டத்தில், எந்த ஊரில், எந்த நாளில் அந்த அரிசி ஆலை தொடங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலே அமைக்கலாம் என்று அதிகாரிகள் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. ஆலங்குளம் பக்கத்திலே இடம் பார்த்திருக்கிறார்கள். வெகு விரைவிலே இடம் முடிவுபெற்று பணிகள் தொடங்கப்படும்.

771—(*வினா எண். 8885)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் உள்ள நவீன அரிசி ஆலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரரசு : (அ) ஆம்.

[1986 மே 13,

(ஆ) பட்டுக்கோட்டையில் இயங்கி வரும் நவீன அரிசி ஆலையின் தற்போதைய குறியீட்டுச் செயல் திறன், மாதம் ஒன்றுக்கு 1,400 டன் நெல் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது இயங்கி வரும் இயந்திரங்களோடு, மேலும் இன்றியமையாத ஒரு சில இயந்திரங்களை இணைத்து, இவ்வாலையின் செயல் திறனை மாதம் ஒன்றுக்கு 2,000 டன் நெல் என உயர்த்துவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 12.50 இலட்சம் ஆகும். இத்திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் முழுமையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையில் இருக்கின்ற நவீன அரிசி ஆலையை விரிவுபடுத்துவதற்கு 12.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். புரட்சித் தலைவருக்கும், இந்த அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நவீன அரிசி ஆலையில் இப்போது நெல் அதிகம் வருகின்ற நேரத்தில், சேமிப்புக் கிடங்கு வசதியையும் சேர்த்து உருவாக்கித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து அங்கே பணியாளர்கள்—தற்காலிகப் பணியாளர்கள்—மூட்டை தூக்குபவர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு தொழிற்சாலைச் சட்டத்தின்படி 460 நாட்கள் பணியாற்றுகின்றவர்களை நிரந்தரமாக பணியில் அமர்த்துகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்புக் கிடங்கைப் பற்றி தனியாகப் பரிசீலித்து உரிய வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களைப் பொறுத்தவரைக்கும் நிரந்தர பணியாளர்கள் ஏற்கனவே பல்வேறு அரிசி ஆலைகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மூட்டை தூக்குவது மற்றும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அங்கே நிரந்தரப் பணியாளர்களாக இல்லாமல் டிரான்ஸ்போர்ட் காண்டிராக்டேர்ஸ்இடத்திலே அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இதுகுறித்தெல்லாம் ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 772 மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.